# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2018

| தரம் - 8 | வரலாறு | நேரம் : 2.00 |
|---|---|---|

சுட்டெண் : ..............................

## பகுதி – I

❖ **மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. மின்னேரித் தெய்வம் எனப்போற்றப்படுகின்ற மன்னன்
   1) மகாபராக்கிரமபாகு  2) மகாசேனன்
   3) பண்டுகாபயன்  4) தாதுசேனன்

02. கி.பி 1215 இல் இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம்
   1) வரட்சி  2) தொற்றுநோய்கள்
   3) கலிங்க மாகனின் படையெடுப்பு  4) குளங்கள் பாழடைந்தமை

03. இலக்கிய மூலாதாரங்களின் படி இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது தாதுகோபம்
   1) ருவன்வெலிசாய  2) மிரிசுவெட்டி
   3) தூபராம  4) ஜேத்தவனராம

04. இலங்கையின் மத்திய மலைநாட்டின் செங்கடகல நகரை மையமாகக் கொண்டு உருவாக்கிய இராச்சியம்
   1) கண்டி இராச்சியம்  2) சீதாவாக்கை இராச்சியம்
   3) கோட்டை இராச்சியம்  4) றைகம இராச்சியம்

05. கண்டி இராச்சிய வரலாற்றில் அதிக காலம் ஆட்சி செய்த மன்னன்
   1) செனரத்  2) முதலாம் விமலதர்மசூரியன்
   3) இரண்டாம் இராஜசிங்கன்  4) இரண்டாம் விமலதர்மசூரியன்

06. கண்டி இராச்சியத்தில் பன்புல் உற்பத்திப் பொருட்களுக்குப் பிரசித்தம் பெற்றிருந்த பிரதேசம்
   1) கொத்மலை  2) பலன  3) கிரிவவுல  4) தும்பறை

07. தாழ்நாட்டுப் பிரதேசங்களிலிருந்து கண்டி இராச்சியத்திற்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணவாய்கள்.
   1) உன்னஸ்கிரிய, பலன  2) அப்புத்தளை, எல்ல
   3) பலன, எல்ல  4) கினிஹத்தேன, பலன


kalvi.lk

08. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி முதன் முதல் ஆரம்பமான நாடு

1) ஸ்பெயின் 2) போர்த்துக்கல் 3) ஒல்லாந்து 4) இத்தாலி

09. புராதன காலத்தில் கீழைத்தேச, மேலைத்தேச வர்த்தக மையமாக விளங்கிய நகரம்.

1) வெனிஸ் 2) கொன்ஸ்தாந்திநோபிள்

3) ஜெனோவா 4) மிலான்

10. இயேசு நாதரின் இறுதி இராப்போசனம் என்ற கலைப்படைப்பினை வரைந்த ஓவியர்

1) ரபாயல் 2) டொனடெலா

3) லியனாடோ டாவின்சி 4) மைக்கல் ஆஞ்சலோ

11. கீழைத்தேசங்களுக்கான கடற்பாதையைக் கண்டறிந்த நாடுகாண்பயணி

1) வாஸ்கொடகாம 2) மகலன்

3) கொலம்பஸ் 4) அமெரிக்கோ வெஸ்புசி

12. முதன் முதல் ஆசியாவுக்கு வருகை தந்த ஐரோப்பிய இனத்தவர்

1) பிரித்தானியர் 2) போர்த்துக்கேயர்

3) பிரான்ஸியர் 4) ஒல்லாந்தர்

13. தனது நாடுகாண் பயணத்தின் மூலம் உலகைச் சுற்றி வந்து புவி கோள வடிவமானது என நிரூபித்த நாடுகாண் பயணி

1) கடலோடி ஹென்றி 2) பேர்டினனட் கோடேஸ்

3) பேர்டினனட் மகலன் 4) பிரான்சிஸ்கோ பிசாரோ

14. கி.பி. 1492 இல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் தரை இறங்கிய தீவுக்கூட்டம்

1) கியூபா தீவுகள் 2) பிலிப்பைன்ஸ் தீவுகள்

3) மேற்கிந்தியத் தீவுகள் 4) மாலைதீவு

15. இலங்கையைச் செய்லான் என அழைத்தவர்

1) ஒல்லாந்தர் 2) அரேபியர் 3) ஆங்கிலேயர் 4) போர்த்துக்கேயர்

16. யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயப் படைக்குத் தலைமை தாங்கிய தளபதி

1) ஜோன் பைபஸ் 2) தியோகு-த-மேலோ-கஸ்ரோ

3) பிலிப் த ஒலிவேரா 4) கொன்ஸ்தாந்தைன் த சூசா

Education கல்வி அධ්‍යාපන

17. இலங்கைக்கு முதன் முதல் வருகை தந்த மிசனரி சபை

1) இயேசு சபை
2) டொமினிக்கன் சபை
3) பிரான்சிஸ்கன் சபை
4) அகஸ்தீன் சபை

18. சீதாவாக்கை இராச்சியத்தைக் கட்டியெழுப்பிய மன்னன்

1) ஏழாம் புவனேகபாகு
2) மாயாதுன்னை
3) சேனாசம்மத விக்கிரமபாகு
4) முதலாம் இராஜசிங்கன்

19. போர்த்துக்கேயர் முதன் முதல் இலங்கையில் தொடர்பினை ஏற்படுத்திய இராச்சியம்

1) கோட்டை
2) கண்டி
3) யாழ்ப்பணாம்
4) றைகம

20. போர்த்துக்கேயரின் வருகையால் எமது நாட்டில் பரவிய இசை வடிவங்கள்

1) மேற்கத்தேய இசை
2) இந்துஸ்தானி, கர்நாடக சங்கீதம்
3) மெண்டலின் இசை
4) பைலா, கபிரிஞ்ஞா

(40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி – II

❖ முதலாம் வினாவில் அ, ஆ பகுதிகள் கட்டாயமானது.

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. அ)

1) மூன்றாம் தவணையில் வரலாறு பாடத்தில் நீர் செய்த கணிப்பீட்டு வகையைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2) கணிப்பீட்டிற்காக நீர் திரட்டிய தகவல்கள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)


3) கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்ததன் மூலம் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)



kalvi.lk

ஆ) உலகப்புறவுருவப்படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறித்துக்காட்டப்பட்ட இடங்களை இனங்கண்டு எழுதுக.




1. வங்களா விரிகுடா ( )
2. கருங்கடல் ( )
3. சுமாத்திரா ( )
4. பிரான்ஸ் ( )
5. புயல்முனை ( )
6. கிறீன்லாந்து ( )

(6 புள்ளிகள்)

02.

1) பின்வரும் செயற்பாடுகளுக்காக அமைக்கப்பட்ட குளத்தின் உறுப்புக்களைப் பெயரிடுக.

i. நீரினால் குளக்கட்டு அரிக்கப்படுவதைத் தடுத்தல்.

ii. குளத்தில் படிந்துள்ள சேற்றை அகற்றுதல்.

iii. இன்னொரு நீர் மூலாதாரத்திலிருந்து குளமொன்றிற்க்கு நீரைப் பெற்றுக் கொள்ளல்.

(3 புள்ளிகள்)

2) i) பின்வரும் கால்வாய்களை அமைத்த மன்னர்களைக் குறிப்பிடுக.

a) எலஹர –
b) மினிப்பே –

(2 புள்ளிகள்)

ii) புராதன இலங்கையில் பொய்கைகள் அமைக்கப்பட்டதற்கான இரண்டு காரணங்கள் தருக.

(2 புள்ளிகள்)

3) i) வசப மன்னனால் கட்டுவிக்கப்பட்ட குளங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ii) பாரிய குளங்களை அமைத்தமையால் இலங்கையர் அடைந்த அனுகூலங்கள் மூன்று தருக.

(3 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

03.

1) கண்டி இராச்சியத்திற்கு வழங்கப்பட்ட மறுபெயர்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய மன்னர்களைப் பெயரிடுக.

i. கண்டி இராச்சியத்தில் புதிய அரச பரம்பரை ஒன்றைத் தோற்றவித்த மன்னன்.

ii. கண்டி இராச்சியத்தின் இறுதிச் சிங்கள மன்னன்.

iii. பௌத்த சமய மறுமலர்ச்சிக்குப் பணியாற்றிய வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரருக்கு சங்கராஜா பதவியை வழங்கிய மன்னன்.

iv. கன்னொருவ, ரந்தெனிவெல யுத்த வெற்றிக்கு வித்திட்ட மன்னன்.

(4 புள்ளிகள்)

3) i) கண்டி இராச்சியத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட நான்கு பொருட்களைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ii) கண்டி இராச்சிய கால ஓவியக்கலையில் காணப்பட்ட சிறப்பான பண்புகள் மூன்று தருக.

(3 புள்ளிகள்)

04.

1) மத்திய கால இறுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பின்வரும் பல்கலைக்கழகங்கள் அமைந்திருந்த நாடுகளைத் தருக.

i) பரிஸ் -

ii) பொலஞ்ஆஞோ

iii) ஒக்ஸ்போட்

(3 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய மறுமலர்ச்சிக்கால கண்டுபிடிப்பாளர்களைப் பெயரிடுக.

i) தொலை நோக்கியைக் கண்டுபிடித்தவர் -

ii) சூரியனைக் கோள்கள் நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன எனக் கண்டறிந்தவர்-

iii) வானியல் விஞ்ஞானத்தின் தந்தை -

iv) அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தவர் -

(4 புள்ளிகள்)

3) i) மறுமலர்ச்சிக் கால கலைஞர் மைக்கல் ஆஞ்சலோவின் கலைப்படைப்புக்களில் இரண்டினை எழுதுக.

(2 புள்ளிகள்)

ii) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான மூன்று காரணங்களைத் தருக.

(3 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

05.

1) நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய ஐரோப்பிய நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

2) பின்வரும் நாடுகாண் பயணிகளால் கண்டறியப்பட்ட பிரதேசங்களைப் பெயரிடுக.

i) அமெரிக்கோ வெஸ்புசி

ii) பர்த்தலோமிய டயஸ்

iii) வாஸ்கொடகாம

iv) ஹென்றி ஹட்சன்

(4 புள்ளிகள்)

3) i) ஐரோப்பியர் கீழைத்தேசங்களுக்கு வருகை தந்தமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

ii) நாடுகாண் பயணத்திற்கான மூன்று காரணிகளைத் தருக.

(3 புள்ளிகள்)

06.

1) விஜயபாகு கொள்ளையின் பின் பிளவுபட்ட கோட்டை இராச்சியத்தின் பின்வரும் பிரிவுகளின் ஆட்சியாளர்களது பெயர்களைக் குறிப்பிடுக.

i) கோட்டை

ii) றைகம

iii) சீதாவாக்கை

(3 புள்ளிகள்)

2) கண்டி இராச்சியம் மீது போர்த்துக்கேயர் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கள் தோல்வியடைந்தமைக்கான நான்கு காரணங்களை எழுதுக.

(4 புள்ளிகள்)

3) போர்த்துக்கேயர் மக்களைக் கத்தோலிக்க மதத்திற்கு மாறுவதற்குப் பின்பற்றிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

(5 புள்ளிகள்)



kalvi.lk